# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:** *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| **09 ஜூன் 2019** | **தூய ஆவியாரின் பெருவிழா** | **மூன்றாம் ஆண்டு** |



# உங்கள் சிந்தனைக்கு...

நம் ஆண்டவர் இயேசு நமக்குக் கொடுத்தத் துணையாளராம் தூய ஆவியாரின் பெருவிழாவைக் கொண்டாட மேல்வீட்டறையில் கூடியிருந்தத் திருத்தூதர்கள் போல, இன்று ஆலயத்தில் ஒன்றிணைந்து ஆவலுடன் திருப்பலியில் பங்கேற்க வந்துள்ள உங்கள் அனைவருக்கும் இயேசுவின் பெயரால் அன்பு வாழ்த்துக்கள்!

இன்று தூய ஆவியாரின் பெருவிழா. தூய ஆவியார் யார்? இதோ தூய ஆவியாரைச் சுட்டிக் காட்டப் பயன்படுத்தப்படும் ஐந்து அழகான அடையாளங்கள்:
1. புறா, 2. தண்ணீர், 3. காற்று, 4. நெருப்பு, 5. நாக்கு.
இந்த 5 அடையாளங்களும் சுட்டிக் காட்டும் உண்மைகள் எவை?

1. புறா (லூக் 3:22): புறா உண்டாக்குதலுக்கு அடையாளம். இதனால்தான், கடவுள் உலகை உண்டாக்குவதற்கு முன் நீர்த்திரளின் மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக்கொண்டிருந்தது (தொநூ 1:2) என்று திருவிவிலியம் கூறுகின்றது. தூய ஆவியார் என்பவர் புதியவற்றை உருவாக்குகின்றவர்.

2. தண்ணீர் (யோவா 4:14): நமக்குள்ளே பொங்கி எழும் ஊற்றுதான் தூய ஆவியார். ஊற்று எப்படி நமது தாகத்தைத் தீர்க்கின்றதோ அதுபோல, நாம் தூய ஆவியாரின் வரங்கள், கனிகள் மீது தாகம் கொண்டு அவரை நோக்கி மன்றாடிப் பெற்றுக் கொள்வோம்.

3. காற்று (திப 2:2): உயிர்வாழ காற்று அவசியம். ஆக, உயிரளிப்பவர் தூய ஆவியானவர். நாம் கிறிஸ்தவ வாழ்வு வாழ தூய ஆவியானவரின் துணை அவசியம். இல்லையென்றால் தூய வாழ்வுக்கு நாம் மடிந்து போவோம்.

4.நெருப்பு (திப 2:3): நெருப்பு எரித்தலுக்கு அடையாளம். தூய ஆவியார் என்பவர் நம் பாவங்களை சுட்டெரிப்பவர்! தூய ஆவியானவரிடம் நம் பாவ வாழ்வை ஒப்புக்கொடுத்து செபிக்கும் போது, நாம் ஊனியல்பைக் விட்டு விலகி, ஆவிக்குரிய இயல்பைக் கொண்டிருக்க நமக்கு உதவி செய்வார் (உரோ 8:9).

5. நாவு (திப 2:3): நாக்கு பேச்சுக்கு அடையாளம். ஆகவே ஆவியார் நமக்கு பேசும் வரத்தைத் தருபவர். தூய ஆவியார் திருத்தூதர்கள் மீது இறங்கி வந்ததால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத் தொடங்கினர் என இன்றைய முதல் வாசகம் கூறுகின்றது. நாமும் ஆண்டவரின் வார்த்தைகளைக் கொண்டு நற்செய்தி அறிவிக்க தூய ஆவியானவரின் துணை அவசியம்.

எனவே, தூய ஆவியார் என்பவர் புதியனவற்றை உண்டாக்குகின்றவர். நமது ஆன்மீகத் தாகங்களைத் தீர்ப்பவர். நமக்கு உயிரளிப்பவர். நம் பாவங்களைச் சுட்டெரிப்பவர். நம்மை நற்செய்தியின் தூதுவர்களாக மாற்றுபவர். தூய ஆவியார் நமது துணையாளர் என்ற உண்மையை இன்றைய நற்செய்தியில் இயேசு நமக்குச் சுட்டிக்காட்டியிருப்பதை எப்போதும் நமது நினைவில் கொள்வோம். தூய ஆவியைப் பெற்றுக்கொள்ள தாகத்தோடு செபிப்போம்.

## தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள்




பள்ளி விடுமுறை காரணமாக இவ்வாரம் தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள் நடைபெறாது. மீண்டும் தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள், 07-07-2019 முதல் ஆரம்பமாகும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

## ஆலயப் புதுப்பிக்கும் பணிக்கான நிதி சேகரிப்பு



அன்பார்ந்தவர்களே! நமது தூய லூர்து அன்னை ஆலயப் புதுப்பிக்கும் பணிகள், வருகின்ற ஜூலை மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்காக உங்கள் நன்கொடைகளை காசோலை மூலமாக "Church of Our Lady of Lourdes" என்ற பெயருக்கு வழங்கலாம். காசோலையின் பின்புறத்தில் "Building Fund" என்று குறிப்பிடவும். தாராள மனதுடன் உங்கள் நன்கொடைகளை அளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## இடைவிடா சகாய அன்னை நவநாள்



**சனிக்கிழமைகளில்** இரவு 8:30 மணிக்குத் தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்வியநற்கருணை ஆசீரும் நடைபெறும். நம் அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெறவும், திவ்விய நற்கருணையில் இறைப்பிரசன்னம் காணவும் அனைவரும் வருக!

## புனித வின்சென்ட் தே பவுல் சபைக்கான காணிக்கை

கடந்த ஞாயிறு (02-06-2019) அன்று எடுக்கப்பட்ட இரண்டாம் காணிக்கையில் கிடைத்த மொத்த தொகை S$ 4064.10
பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தொகை S$ 6960.00
தாராளமாகக் கொடுத்த உங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

## ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணி




**நாள்: 16-06-2019, ஞாயிறு மதியம் 2:30 மணி**

ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு, நமது ஆலயம் மதியம் 2:30 முதல் 4:00 மணிவரை மூடப்பட்டிருக்கும். வாருங்கள்! நமது ஆலயத்தை தூய்மைப்படுத்த தன்னார்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

## முழு இரவுத் திருவிழிப்பு செப வழிபாடு

**மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமை, இரவு 9:30 முதல் காலை 5:30 வரை**

இரவு முழுதும் விழித்திருந்து, இறைவனின் அன்பை சுவைக்கவும், அவரைப் பற்றி மேலும் அறிந்து, அவரோடு உறவாடவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு உங்களை அன்புடன் அழைக்கிறோம்.



## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதல் வாசகம்:** | திருத்தூதர் பணி 2: 1-11 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 96:1-2, 6-7, 9 |
| **பதிலுரை:** | ஆண்டவரே, உம் ஆவியை அனுப்பி, மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிக்கின்றீர். |
| **இரண்டாம் வாசகம்:** | உரோமையர் 8:8-17 |
| **வாழ்த்தொலி:** | அல்லேலூயா, அல்லேலூயா! தூய ஆவியே, எழுந்தருளி வாரும், உம்மில் நம்பிக்கை கொண்டோரின் இதயங்களை நிரப்பியருளும், அவற்றில் உமது அன்பின் தீ பற்றியெரியச் செய்தருளும். அல்லேலூயா! |
| **நற்செய்தி வாசகம்:** | யோவான் 14:15-16,23-26 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி (ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

